**தலைப்பு 154 – கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக் கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்படுவார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 154 – கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 29 ஆம் திகதி அமைச்சின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.19 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டுப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். (திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிதி மற்றும் திணைக்களத்தின் கட்டளைகளுக்கு இணங்குதல் மாத்திரம் அல்லாமல் கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட உயர்தர நேர்மையுடன் நடைபெறல் வேண்டும்) | 1. | செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2.1.2(ஆ) |
| | | 2. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை | 2.2.2 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.5 |
| | | 2. | முகாமைத்துவ பலவீனங்கள் | 2.8 |
| | | 3. | தீர்வுசெய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள் | 2.7 |
| | | 4. | இணங்காமைகள் | 2.13/2.15(உ) |
| | | 5. | மனித வள முகாமைத்துவத்தில் பலவீனங்கள் | 2.14 |
| | | 6. | செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் | 2.1.2(இ) |
| | | 7. | செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதால் சுற்றாடலிற்கு ஏற்படும் தாக்கங்கள் | 2.1.2(ஈ) |
| | | 8. | பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.2.1 |

| | | | |
|---|---|---|---|
| 127(3) | சுய நிர்வாக திறைமை மற்றும் அறிவினை பயன்படுத்தி பொருத்தமான முறையில் செயற்படக்கூடிய வகையில் சந்தேகமொன்று அல்லது எழுந்துள்ள அனைத்து பிரச்சினைகளும் தமக்கு முன்வைக்கப்படும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல் | 1. வாகன உபயோகத்திலான குறைபாடுகள்<br>2. வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்<br>3. பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதில் குறைபாடுகள் | 2.3(அ)<br>2.3(ஆ)<br>2.9 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரல் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சின் போது பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல் | 1. வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை<br>2. பாதீட்டு நிதி ஏற்பாடு இல்லாமல் கடப்பாடுகளுக்கு உட்படுதல் | 2.1.3 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற்கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டது என்பதும் | 1. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை<br>2. மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை<br>3. குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் பெற்றுக் கொண்ட நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துவதில் குறைபாடுகள் | 2.10(அ)(i)<br>2.10(அ)(ii)<br>2.10(அ)(iii) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.11 |
| 127(7) | உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ | 1. சொத்துக்களிலிருந்து அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானங்கள் கிடைக்காமை<br>2. நட்டங்களும் சேதங்களும் | 2.15(ஈ)<br>2.6 |

ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதற்கும் கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல்.

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய 19 செயற்பணிகள் காணப்பட்டதுடன் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 7 நியதிச்சட்ட நிதியங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவன அமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டினை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் (Activity Plan), செயற்படுத்தப்பட்ட காலப்பகுதி (Time Line) மற்றும் அச் செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள்/ பெறுபேறுகள் (Output/ Outcome) மதிப்பீடு செய்யப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.1.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சினால் 19 பிரதான கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் அதில் 16 கடமைகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன. அவ்வாறு நிறைவேற்றப்படாத 03 பிரதான செயற்பாடுகள் மீது ரூபா 955 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம் குறைபாடுகளுடன் தயாரிக்கப்பட்டதால் செயலாற்றலை ஒப்பீடு செய்ய முடியாதிருந்தமை**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 02 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழான 08 செயற்பாடுகளிற்காக ரூபா 145 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்த சமயத்தில் இலக்கிடப்பட்ட வெளியீடுகளின் எண்ணிக்கை உள்ளடக்கப்பட்டிருக்காததால் அந் நடவடிக்கைகளின் செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருந்ததென உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(இ) செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படுதல்**

சந்தை விலையை நிலைப்படுத்துவதற்கும் அறுவடைக்குப் பின்னரான சேதங்களை குறைப்பதற்கும் தனியார் துறையால் முகாமை செய்யப்பட்ட 05 குளிர் களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 2,000 மில்லியன் மற்றும் ரூபா 500 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டில் பணம் எதுவும் செலவிடப்பட்டிருக்காத போதிலும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 53.4 மில்லியன் தெகையை செலவிட்டு செயற்திட்டத்தின் பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் சாத்திய வள ஆய்வு முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்காதமையாலும் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு போதியளவு காணிகள் காணப்படாதமையாலும் செயற்திட்டம் அரைவாசியில் கைவிடப்பட்டிருந்தது.

**(ஈ) செயற்திட்டத்தால் சுற்றாடலிற்கு ஏற்பட்டுள்ள தாக்கம்**

20,000 பசுக்களை இறக்குமதி செய்வதற்கான செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக சுற்றாடல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை முன்னரே பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் பால் உற்பத்தியில் 5 ஆண்டுகள் கடந்த பின்னர் அவை இலாபமற்றவையாக காணப்படும் போது பண்ணைகளிலிருந்து அவ் மாடுகளை அப்புறப்படுத்துவதற்காக முறையான மற்றும் சுற்றாடல் சார்ந்த நட்புரீதியான நடைமுறையொன்று அப்போது வரைக்கும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து 150 நாட்களினுள் அமைச்சால் பாராளுமன்றத்தில் பட்டியல்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ் அறிக்கை 60 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2018 ஆகஸ்ட் 07 இலேயே பாராளுமன்றத்தில் பட்டியல்படுத்தப்பட்டிருந்தது.

## 2.2 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல்

### 2.2.1 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டின் போது பெறுகை செயன்முறை மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதற்காக அமைச்சிற்கு ரூபா 56.45 மில்லியன் தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றிலிருந்து ரூபா 51.41 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டியிருந்த பெறுகைத் திட்டம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறுள்ளன.

**(அ) பெறுகையை திட்டமிடுதல் மற்றும் ஆரம்ப நிலை**

இந்தக் கட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்கள் மற்றும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) வருடாந்த உத்தேச பெறுகைத் திட்டம்
(ii) பெறுகைப் பொதியின் சுருக்கம்
(iii) ஆரம்பப் பெறுகைத் திட்டம்
(iv) இனங்காணப்பட்ட பெறுகை தொடர்பான விசேட அனுமதியைப் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்
(vi) விதந்துரைப்புக்கள், திட்டங்கள், அடிக் குறிப்புக்கள், நிர்மாணங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தி

**(ஆ) ஒப்பந்தத்திற்கு முன்னரான கட்டம்**

இக்கட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய பின்வரும் ஆவணங்கள் மற்றும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) ஒவ்வொரு ஒப்பந்த தொகுதி மற்றும் கொள்வனவுக் கால உப அட்டவணைகள்
(ii) வேலை, பொருட்கள் மற்றும் சேவை விரிவான கொள்வனவுத் திட்டம்
(iii) மதியுரை சேவைகளுக்கான விரிவான கொள்வனவுத் திட்டம்

**(இ) ஒப்பந்தத்தின் பின்னரான (ஒப்பந்த நிர்வாக) கட்டம்**

இக்கட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய பின்வரும் ஆவணங்கள் மற்றும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) ஒப்பந்த நிர்வாகத் திட்டம்
(ii) ஒப்பந்த நிர்வாகத் திட்டத்துடன் இணைந்த காசுப் பாய்ச்சல் திட்டம்

**2.2.2 பெறுகைச் செயன்முறையை அமுல்ப்படுத்துதல்**

(அ) அமைச்சிற்கான கட்டிடமொன்றை பெற்றுக்கொள்வதற்கான பெறுகை தொடர்பாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பந்தியின் பிரகாரம் 02 வருட காலப்பகுதிக்காக ரூபா 197,017,920 இணங்கப்பட்ட பெறுமதியுடனான பெறுகைக்காக அமைச்சரவை அங்கீகரித்த பெறுகைக் குழு நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.8.2 ஆம் பந்தியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. பதிலாக, அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட குழுவொன்றிடமிருந்து பரிந்துரைகள் பெறபப்பட்டிருந்தன.

(ii) 2015 ஆம் ஆண்டில் கூறுவிலைகள் கோரப்பட்ட போது கட்டிடத்தை குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதி குறிப்பிடப்பட்டிருக்காததுடன் அதன் பின்னர் 03 சந்தர்ப்பங்களின் போது பகிரங்கமாக கூறுவிலைகள் கோரப்படாமல் கூறுவிலைகள் பெறப்பட்டிருந்தன. குத்தகைக்கு பெறப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டிடப் பரப்பு 35,000 சதுர அடியாக இருந்த போதிலும் 41,460 சதுர அடி பரப்பளவுள்ள கட்டிடம் பெறப்பட்டிருந்தது. ஆகையால் 6,460 சதுர அடி பரப்பளவிற்காக ரூபா 30,697,920 மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஏறத்தாழ ஒரு ஆண்டு காலப்பகுதி அக் கட்டிடத்தை பெறுவதற்காக செலவிடப்பட்டிருந்தது.

2015 ஆம் ஆண்டில் இரண்டு ஒப்பந்ததாரர்களால் குறைந்த கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது வரை அவர்களால் கட்டிடம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததால் கட்டிடத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. ரூபா 2,262,337 விலைமனுவைச் சமர்ப்பித்திருந்த வழங்குநரிடமிருந்து மீண்டும் கூறுவிலைகளை கோரி 2016 ஆகஸ்ட் 08 இலிருந்து குத்தகைக்கு பெறுவதற்கு இணங்கியிருந்தார். எவ்வாறாயினும் காரணம் எதுவும் கொடுக்கப்படாமல் அத் தீர்மானம் நிராகரிக்கப்பட்டு குழு ஒன்றினூடாக ரூபா 8,209,080 மாதாந்த வாடகைக்காக கட்டிடம் குத்தகைக்குப் பெறப்பட்டிருந்தது. ஆகையால் ரூபா 142,721,833 மேலதிகக் கொடுப்பனவு ஏற்பட்டிருந்தது.

(iii) குத்தகைக்கு கட்டிடத்தை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மீது வழங்கப்பட்ட தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அவதானிப்புக்கள் மற்றும் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமைக்கான தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் 20,000 பசுக்களை இறக்குமதி செய்வதற்கான புதிய செயற்திட்ட முன்மொழிவின் கீழ் 2017 ஆம் ஆண்டில் 1994 பசுக்களை இறக்குமதி செய்வதற்காக 2007 ஆம் ஆண்டின் பெறுகையூடாக தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வாகனப் பயன்பாடு

#### (i) எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படாமை

2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சு பயன்படுத்திய 47 வாகனங்களில் 36 வாகனங்களின் எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### (ii) வாகனங்களை தவறாக பயன்படுத்துதல்

2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் அரசாங்க செலவினங்களை முகாமை செய்வதற்கான கடிதத்தின் 3 ஆம் பந்திக்கு முரணாக அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்படும் ஆகக்கூடிய உத்தியோகபூர்வ வாகனங்கள் (மோட்டார் வண்டி/ ஜீப்/ டபிள் கெப்) 03 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அவ் எல்லையை விஞ்சி அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரிற்கு 02 குழாம் வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

### (ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சிற்குச் சொந்தமான குருணாகல் பிராந்திய அலுவலகக் கட்டிடம் அமைச்சினால் 2017 யூலை 01 இலிருந்து குருணாகல் மாவட்டச் செயலகத்திற்கு கடிதம் ஒன்றின் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஆகஸ்ட் 15 வரையிலும் கட்டிடம் முறையாக கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

### வருடாந்த வரவுசெலவுத் திட்ட எல்லைகளை விஞ்சி கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்கீட்டு சுற்றறிக்கையின் 02(அ) பந்தியுடன் இணங்காமல் 04 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 15.55 மில்லியன் நிதியேற்பாட்டை ரூபா 0.44 மில்லியனால் மிகைத்து ரூபா 15.99 மில்லியனுக்காக கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 2.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(i) கிராமிய பொருளாதார புனர்வாழ்வு நிதியத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 182.74 மில்லியன் கூட்டுமொத்தமான விசேட பொருளாதார நிலைய வைப்புக்களில் ரூபா 90 மில்லியன் பராமரிப்பு நிதியத்திற்கும் மிகுதி ரூபா 92.74 மில்லியன் 3 பாலங்கள் தொடர்பான செயற்திட்டங்களிற்கும் செலுத்துவதற்கு 2008 ஆம் ஆண்டில் அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அப் பராமரிப்பு நிதியத்திற்கு வழங்கப்பட்ட தொகையில் திறைசேரி உண்டியல்களில் ரூபா 61,184,435 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் முதலிடப்பட்ட தொகை மீதான வட்டி மற்றும் பராமரிப்பு நிதியத்தில் எஞ்சிய தொகையுடன் சேர்த்து ரூபா 75,050,025 கூட்டுமொத்த தொகை நிதியத்தை உருவாக்கிய பிரதான நோக்கத்திலிருந்து விலகி ஏனைய செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. இறுதியில் 2012 திசெம்பர் 10 இல் உள்ளவாறு ரூபா 383,600 தொகை வைப்புச் செய்யப்பட்டு நிதியத்தின் பெயரில் நடைமுறைக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2012 இல் ரூபா 300,000 வைப்புச் செய்யப்பட்டு நடைமுறைக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அது 2012 தொடக்கம் 2016 வரை பொருளாதார மத்திய நிலையங்களிலிருந்து வாடகைகளாக சேகரிக்கப்பட்ட பணம் ஒவ்வொரு ஆண்டும் அதில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. மேலும் அத் தொகையில் ரூபா 29,008,620 தொகை 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது 10 நிலையான வைப்புக்களிலும் ரூபா 500,000 தொகை அழைப்பு வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. 2012 தொடக்கம் 2016 வரை முதலீடு செய்யப்பட்ட நிலையான வைப்புக்களிற்குரிய வட்டியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைக் கணக்கில் ரூபா 2,434,744 மீதி காணப்பட்டது. நடைமுறைக் கணக்கு மீதியில் ரூபா 5,199,885 தொகை நானாவித கொடுப்பனவுகளிற்காக செலவிடப்பட்டிருந்தது.

## 2.6 நட்டங்களும் சேதங்களும்

சாரதியின் பொறுப்பற்ற வாகனமோட்டுதல் காரணமாக வாகனமொன்று விபத்திற்குள்ளாகிய பின்னர் ரூபா 736,625 தொகை அதன் திருத்தங்களிற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் காப்புறுதி இழப்பீடாக ரூபா 608,420 தொகை மாத்திரமே பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 128,205 நட்டம் ஏற்பட்டிருந்தது. 1 ஆண்டு மற்றும் 05 மாதங்களின் பின்னர் அத் தொகையில் குறித்த சதவீதமொன்றை அறவிடுவதற்கு நிதிப் பிரமாணம் 104(4) இன் இறுதி அறிக்கைக்கிணங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. அறவிடப்பட வேண்டிய சதவீதம் தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் சேவையிலிருந்து சாரதி நீக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 4,000 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

## 2.7 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அமைச்சிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக அமைச்சால் திருத்தம் செய்யப்பட்டிருக்காத பந்திகளிற்கான தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2016 | 3.4.2 (அ), (ஆ) | 2017 ஆம் ஆண்டு தொடர்பாக அமைச்சிற்குச் சொந்தமான குருணாகல்லில் அமைந்துள்ள காணி மற்றும் அலுவலகம் 2015 ஏப்ரல் தொடக்கம் 2016 திசெம்பர் 31 வரை ஏனைய அரசாங்க நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 3,202,500 வாடகைப் பணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2018 ஒக்தோபர் வரையிலும் வாடகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் கட்டிடம் தொடர்பாக அமைச்சால் செலவிடப்பட்ட மின்சாரம், நீர், பாதுகாப்பு சேவைகள் மற்றும் ஆதன வரி என்பவற்றின் ரூபா 345,301 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2.8 முகாமைத்துவப் பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

20,000 பசுக்களை இறக்குமதி செய்யும் செயற்திட்டம் (3 ஆம் கட்டம்)

(அ) இறக்குமதி செய்யப்பட்ட பசு மாடு கால்நடை மருத்துவ மேற்பார்வையின் கீழ் 30 நாட்களிற்கு தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் நோய்த்தொற்றுத் தடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும், பசு மாடு இறக்குமதி செய்யப்பட்டதும் அரசாங்க பண்ணையில் நேரடியாக எடுத்துச் சென்று பராமரிக்கப்படுதல், இரண்டாம் தலைமுறை விவசாயிகளிற்கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், ஐரோப்பிய மரபணுக்களையுடைய பசு மாடு குறிப்பிடப்பட்ட இரண்டாம் தலைமுறைக்கு சேர்க்கப்பட வேண்டியிருப்பதால் முறையாக முகாமை செய்யப்பட வேண்டும் மற்றும் அவை விவசாயிகளிற்கு நேரடியாக பகிர்ந்தளிக்கும் விடயத்தில் அவை முறையான முகாமைத்துவத்துடனான பாரியளவிலான பண்ணைகளிற்கு வழங்கப்பட வேண்டியதால் இலாபங்கள் அதிகரிக்கும் ஆகிய நிபந்தனைகளின் கீழ் 20,000 பசுக்களை இறக்குமதி செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ் வகையில் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தாமல் முதலாவது தலைமுறையின் பசு மாடு நோய்த்தடுப்பு காலப்பகுதியிலேயே சிறிய பண்ணைகளிற்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களை பகிர்ந்தளிப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட களப் பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தெரிவு செய்யப்பட்ட பால் உற்பத்தி செய்யும் 21 விவசாயிகளில் முன்னனுபவத்தை பெற்றிருக்காத 2 பண்ணைகள் மற்றும் முன்னனுபவத்தை உடைய 3 விவசாயிகளிற்கு பசுக்கள் வழங்கப்பட்டிருந்தன. விவசாயிகளின் கடன் தவணைப்பணக் கொடுப்பனவு மற்றும் பால் விற்பனை போன்ற விடயங்களில் அமைச்சு கவனம் செலுத்தியிருக்கவில்லை. பசு மாடு விநியோகிக்கப்பட்ட பண்ணையொன்று வழங்கப்பட்ட முகவரியில் காணப்பட்டிருக்கவில்லை. வழங்கப்பட்ட 902 பசு மாடுகளில் 31 பசு மாடுகள் பண்ணைகளிற்கு எடுத்துவரும் சமயத்தில் சுகவீனமுற்றிருந்ததுடன் நாட்டிற்கு கொண்டுவருவதற்கு முன்னர் பரீட்சிக்கப்படாததன் காரணமாக ஏனைய பசு மாடுகளிற்கும் நோய்கள் பரவுவதற்கான ஆபத்து காணப்பட்டது.

(ii) 20,000 பசுக்களை இறக்குமதி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 2017 திசெம்பர் 27 இல் நாட்டிற்கு 3024 பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. பிரதம கால்நடை நோய்த்தடுப்பு உத்தியோகத்தர் மற்றும் கால்நடை ஆராய்ச்சிப் பணிப்பாளர் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி பசு மாடு தொடர்பான நோய்த் தடுப்பு அறிக்கையின் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்ட பசு மாட்டின் நோய்க் கிருமிகளால் மனிதர்கள் மற்றும் உள்ளூர் மாடுகளிற்கு நோய்த்தாக்கம் ஏற்படுவதற்கான ஆபத்து காணப்பட்டிருந்ததென கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் 2018 பெப்ரவரி 28 இல் எழுத்து மூலம் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரிற்கு அறிவித்திருந்தார். மேலும் குறிப்பிடப்பட்ட அறிக்கை தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தீர்மானித்திருந்த அதே நேரம் சில பசு மாடுகள் அழிவடையும் ஆபத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் குறிப்பிடப்பட்ட அறிக்கை மற்றும் உரிய பரிந்துரைகள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் 20,000 பசுக்களில் மிகுதியாகவுள்ள 15,000 பசுக்களை உடனடியாக இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iii) 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே 2,500, 7,500 மற்றும் 5,000 மாடுகளை இறக்குமதி செய்வதற்கு செலுத்த வேண்டிய ஐ.அ.டொலர் 55,465,541 தொகையில் 20 சதவீதத்திற்கு சமமான ஐ.அ.டொலர் 11,093,108 அல்லது ரூபா 1,749,672,697 முற்பணம் உரிய செலவினத்தை மேற்கொள்வதற்கு ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தில் நிதியேற்பாடு இல்லாமல் 2018 மே 08 இல் ஒப்பந்ததாரரிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு வங்கியொன்று கடன்களை வழங்கியிருந்தது.

(iv) கலேவெலவிலுள்ள பண்ணையொன்றிற்கு பால் உற்பத்தி செய்யாத ஆறு பசு மாடுகள் வழங்கப்பட்டிருந்தன. விவசாயிக்கு 10 பசு மாடுகளின் பெறுமதியான ரூபா 2,000,000 தொகையை வெல்லாட் கம்பனி வழங்கியிருந்ததென விவசாயியால் அறியத்தரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அமைச்சால் செலவிடப்பட்ட ரூபா 3,215,510 தொகை அரசாங்கத்திற்கு நட்டமாகியிருந்தது.

(v) கருவுறச் செய்திராத அல்லது கருவுறாதிருக்கும் என பரீட்சிப்பில் குறிப்பிடப்பட்ட 11 பசு மாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டதன் காரணமாக விவசாயிகளிற்கு ரூபா 1,650,000 நட்டமும் அமைச்சிற்கு ரூபா 5,606,260 நட்டமும் ஆக ரூபா 7,256,260 கூட்டுமொத்தமான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(vi) 13 பசு மாடுகளை பகிர்ந்தளித்ததிலிருந்து 06 மாத காலப்பகுதியின் பின்னரும் 13 பசு மாடுகளும் கருவுறாதிருந்தமை அல்லது கரு கலைந்திருந்தமை காணப்பட்டது. ஒவ்வொரு கால்நடைக்காக ரூபா 50,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(vii) பசு மாடு செயற்திட்டத்திற்கு இணையாக ஆரம்பிக்கப்பட்ட 02 செயற்திட்டங்களான சோள பயிர்செய்கை செயற்திட்டம் மற்றும் அலுபா மற்றும் அல்பா (Allufa and Alpha) செயற்திட்டங்கள் வெற்றியளித்திருக்கவில்லை. ஆகையால் இறக்குமதி செய்யப்பட்ட பசு மாடுகளிற்கு உணவளிப்பது சிக்கலாக இருந்ததுடன் வழங்கப்பட்ட உணவு தொடர்பில் பாரிய செலவினங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆகையால் கடனாளிகளாக மாறியிருந்த விவசாயிகள் வெளிநாட்டு பசு மாடுகளை அகற்ற வேண்டியிருந்தது.

(இ) 2015 செப்தெம்பர் 21 ஆம் திகதிய 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் கிராமிய புனர்வாழ்வு நிதியம், கிராமிய பொருளாதார புனர்வாழ்வு நிதியம் (நிதிசார்) மற்றும் ஜனதிரிய நிதியம் (கிராமோதய

மண்டல நிதியம்) என்பன 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை செயற்பாடற்றிருந்தன.

(ஈ) ரூபா 16,300,000 கிரயமான ஆறு வாகனங்கள் 2015 ஆம் ஆண்டிலிருந்து ஓட்டத்திலிருந்து நிறுத்தப்பட்டிருந்ததுடன் திருத்தம் செய்த பின்னர் பயன்படுத்துவதற்கு அல்லது ஏனைய நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட போதிலும் 2017 திசெம்பர் 31 வரையிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 நவம்பர் 15 இல் இடம்பெற்ற வாகன விபத்தின் போது அமைச்சு செயலாளர் அல்லது பதவிநிலை உத்தியோகத்தரிற்கு அறிவிக்கப்படாமல் பிரதி அமைச்சரின் அறிவுறுத்தலிற்கமைய அதே நாளில் வாகனம் திருத்துமிடத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் திருத்தங்களிற்காக ரூபா 551,285 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக ரூபா 200,000 தொகையான காப்புறுதி இழப்பீடு பெறப்பட்டிருந்த போதிலும் விபத்து ஏற்பட்ட திகதியிலிருந்து 2018 மே 01 வரை 37 மாதங்களின் பின்னரும் விசாரணை எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. சாரதி அவரது சேவையை முடிவுறுத்தியிருந்தமையால் ரூபா 351,285 தொகை அறவிடப்படாதிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது.

**2.9 பொதுமக்களிற்கு சேவைகளை வழங்குதல்**

பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்த போதிலும் பால் சேகரிக்கும் நிலையங்கள் புனரமைக்கப்படாதமை, முறையான மேற்பார்வையின் கீழ் பால் சேகரிக்கும் நிலையங்கள் தொழிற்படாதமை, மேற்பார்வை செய்வதற்கு சாத்தியமாக இதனை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மாற்றியமைக்கப்படாதமை, பாலை உற்பத்தி செய்யும் விவசாயிகளிற்காக தூய பாலிற்குரிய பொருத்தமான விலை காணப்படாதமை, பால்சாலைகளை மூடுவதை குறைப்பதற்கு தவறியமை மற்றும் பாலுடன் இணைந்த கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமை போன்ற காரணங்களினால் தூய பால் நுகரப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**2.10 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த 03 ஆண்டுகள் காலப்பகுதியின் போது அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2015 | மீண்டுவருபவை | 7,788.42 | 7,696.15 | 92.27 | 1.18 |
| | மூலதனம் | 10,575.75 | 4,235.36 | 6,340.39 | 59.95 |
| | **மொத்தம்** | **18,364.17** | **11,931.51** | **6,432.66** | **35.03** |
| 2016 | மீண்டுவருபவை | 942.47 | 937.73 | 4.74 | 0.5 |
| | மூலதனம் | 9,427.96 | 7,365.25 | 2,062.72 | 22 |
| | **மொத்தம்** | **10,370.43** | **8,302.98** | **2,067.46** | **20** |
| 2017 | மீண்டுவருபவை | 896.29 | 610.08 | 286.21 | 32 |
| | மூலதனம் | 9,477.31 | 7,274.00 | 2,203.31 | 23 |
| | **மொத்தம்** | **10,373.60** | **7,884.08** | **2,489.52** | **24** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை**

9 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 601.5 மில்லியன் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் எதுவும் பயன்படுத்தப்படாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தமை**

23 செலவின விடயங்களுக்காக மொத்தமாக ரூபா 1,443.37 மில்லியன் மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் மொத்தம் ரூபா 1,294.87 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் சேமிப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 14 சதவீதம் தொடக்கம் 99.9 சதவீதம் வரையான வீச்சிலான அளவில் காணப்பட்டது.

**(iii) குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் நிதிஏற்பாடு மேற்கொள்ளல்**

செலவினத் தலைப்பொன்றிற்காக 2017 மார்ச் 31 இல் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 400,000,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மொத்த நிதியேற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.11 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 15401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந் த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடி ய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 25.00 | 24.97 | 9.5 | 11.92 | 80.00 | 43.20 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவையாக இருந்த கடன் மீதிகள் அறவீடு செய்யப்படாமை**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர ரூபா 249,224 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகள் 01 ஆண்டு தொடக்கம் 15 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இருந்து வந்த போதிலும் அந் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையில் இருந்தன.

**2.12 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 10 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| பிணை வைப்புப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 880 | பிணை வைப்புப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பூரணப்படுத்தப்படாத பொறுப்புக்கள் பதிவேடு பேணப்பட்டிருந்தது. |

**2.13 சட்டங்கள் மற்றும் விதிகளுடனான இணங்காமைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | |
| நிதிப் பிரமாணம் 104(4) | 2015 சனவரி 08 இல் ஏற்பட்ட வாகன விபத்தொன்றின் போது ரூபா 140,000 திருத்தச் செலவொன்றாக செலவிடப்பட்டிருந்ததுடன் இதற்காக நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் மீளாய்வாண்டில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) திறைசேரிச் சுற்றறிக்கைகள்** | |
| 2004 யூலை 29 ஆம் திகதிய பீஈடி 25 ஆம் இலக்க சுற்றறிக்கை | நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட தொகையிலிருந்து ரூபா 29,508,620 தொகையை முதலீடு செய்தமைக்காக சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) பொது நிதிச் சுற்றறிக்கைகள்** | |
| (i) 2016 யூலை 29 ஆம் திகதிய 07/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் 15 பொருளாதார நிலைய முகாமைத்துவ நம்பிக்கைப்பொறுப்புக்கள், 15 நிலையான வைப்புக்கள், 17 நடைமுறைக் கணக்குகள் மற்றும் 04 சேமிப்புக் கணக்குகள் என்பவற்றில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 508,090,680 கூட்டுமொத்த தொகை தொடர்பான தகவல்கள் அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பிஎஸ்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4.2 (இ) பந்தி | பொருளாதார நிலைய பராமரிப்பு நிதியத்தின் கணக்குகள் நாளாந்தம் ஒப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் செயன்முன்னேற்றங்கள் தொடர்பாக ஒவ்வொரு காலாண்டிற்காகவும் அறிக்கைகள் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | 4.3 ஆம் பந்தி | செயலாற்றல் அறிக்கையுடன் சேர்த்து நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கான பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**(ஈ) அரச கணக்குகள் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | வெளித்தரப்பினர்களுடன் கைச்சாத்திடப்பட்ட ரூபா 5,402,721,363 பெறுமதியான பொருட்கள், சேவைகள், வழங்கல்கள் மற்றும் வேலைகள் தொடர்பான உடன்படிக்கைகள் மற்றும் கட்டளைகள் 2018 மே 01 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.14 மனித வளங்கள் முகாமைத்துவம்

### 2.14.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மேலதிக பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 324.96 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு நபருக்கான செலவினம் ரூபா 496,877 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 35 | 26 | 09 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 696 | 567 | 129 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 51 | 55 | - | 04 |
| (v) | அமையம்/ ஒப்பந்தம் | 04 | 04 | - | - |
| | **மொத்தம்** | **289** | **654** | **139** | **04** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

அமைச்சினால் மீளாய்வாண்டின் போது ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த மனித வளம் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | விடுவிக்கப்பட்டிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (i) | அபிவிருத்தி உதவியாளர் | 02 | இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்ட அலுவலகம் | |
| (ii) | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 27 | நெல் சந்தைப்படுத்தல் சபை | 09 மாதங்கள் |
| (iii) | சாரதி | 01 | நெல் சந்தைப்படுத்தல் சபை | 05 ஆண்டுகள் |
| | | 01 | பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 2016 பெப்ரவரி 01 தொடக்கம் |

நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு விடுவிக்கப்பட்ட 27 ஊழியர்களிற்காக அமைச்சினால் சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளாக முறையே ரூபா 12,460,650 மற்றும் ரூபா 11,842,219 தொகைகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப் பணத்தை மீள்நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பதவியணியினரை பயிற்றுவித்தல்**

(i) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எந்த விதத்திலும் பயிற்சியினை பெற்றிராத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 39 ஆக இருந்தது.

(ii) கடந்த 3 வருடங்களினுள் பயிற்றுவித்தல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு மற்றும் பயன்படுத்தப்பட்டிருந்த தொகை என்பவற்றை ஒப்பீடு செய்த போது நிதியேற்பாடுகளில் 35 சதவீதம் தொடக்கம் 45 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

**2.15 அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் பொருளாதார நிலையங்களை ஸ்தாபித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்**

**(அ) பிரதான செயற்பாடுகளிற்கு முரணாக நடவடிக்கை எடுத்தல்**

விஷேட பொருளாதார நிலையங்களை ஸ்தாபிப்பதன் பிரதான நோக்கம் விவசாயிகளின் விவசாய உற்பத்திகளை நேரடியாக விற்பனை செய்வதற்காகவும், அதனுடன் தொடர்புபடும் உற்பத்தியாளர்களிற்கான மொத்த வியாபாரிகள் மற்றும் நுகர்வோர்களிற்காகவும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலாகும். எவ்வாறாயினும் அந் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருந்ததா என மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் 05 நிலையங்களில் வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பொருளாதார நிலையங்களின் இறுதிக் கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

கொழும்பு, கம்பஹா, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அமைந்துள்ள 07 பொருளாதார நிலையங்கள் 2017, 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிலையங்களின் முறையே 07, 02 மற்றும் 01 நிதிக்கூற்றுக்கள் 2018 யூலை 15 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பொருளாதார நிலையங்களிலுள்ள வியாபார கடைகளின் வாடகைகளை அறவீடு செய்தல்**

(i) நுவரெலியாவிலுள்ள பொருளாதார நிலையத்தின் வியாபார கடைகளிற்கான வாடகைகள் முறையாக அறவிடப்படாததன் காரணமாக 2017 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கு ரூபா 228,000 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ii) நுவரெலியா, மீகொட மற்றும் ரத்மலானையிலுள்ள பொருளாதார நிலையங்கள் தொடர்பாக முறையே 134, 05 மற்றும் 128 குத்தகைக்குப் பெற்றவர்களுடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இதனால் நுவரெலியாவிலுள்ள பொருளாதார நிலையம் 2012 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 2,252,991 கூட்டுமொத்த வைப்புக்கள் மீதான நிலுவை வட்டியை மீளச் செலுத்துவதற்கு தவறியமை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது.

**(ஈ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை**

நுவரெலியா மற்றும் மீகொட பொருளாதார நிலையங்களின் முறையே ரூபா 4,591,048 மற்றும் ரூபா 107,264,848 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக முறையாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**(உ) சட்டங்கள் மற்றும் விதிகளுடனான இணங்காமைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006 யூலை 21 ஆம் திகதிய நுவரெலியா பொருளாதார நிலைய முகாமைத்துவ நம்பிக்கைப்பொறுப்பு நிதிய உரித்துறுதியின் 10(ஆ) பிரிவு | நம்பிக்கைப் பொறுப்பின் நலன்கள் அல்லது நம்பிக்கைப்பொறுப்பால் பெறப்பட்ட ஏதாவது நிதிகள் நம்பிக்கைப்பொறுப்பின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 89 வியாபார வளாகங்கள் தொடர்பாக (கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சால்) அறவிடப்பட்ட ரூபா 73,925,000 தொகையான வைப்புக்களை நம்பிக்கைப்பொறுப்பின் வருமானத்திற்கு செலவுவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | |
| நிதிப் பிரமாணம் 751 | குருந்துவத்த பொருளாதார நிலையத்தில் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**(ஊ) பொருளாதார நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணிகளை கையேற்பதற்கான நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்காதமை**

கொழும்பு, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்ட 07 பொருளாதார நிலையங்களில் 05 பொருளாதார நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணிகளை கையேற்பதற்கான நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பொருளாதார நிலையம் | காணியின் உரிமைத்துவம் | காணியில் நிலையம் ஸ்தாபிக்கப்பட்ட திகதி | உரிமை இல்லாது பொருளாதார நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணத்தின் பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| இரத்மலானை | புகையிரதத் திணைக்களம் | 2009 | 98,624,600 |
| | புகையிரதத் திணைக்களம், ஹோமாகம பிரதேச சபை | 2003 | 98,935,403 |
| நுவரெலியா | புகையிரதத் திணைக்களம் மற்றும் நுவரெலியா மாநகர சபை | 2006.04.08 | 136,000,000 |
| கந்தஹந்திய | கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 2016.01.27 | 21,700,000 |
| குருந்துவத்த | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | 2008.02.17 | 38,400,000 |

(எ) சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்ளாமல் பொருளாதார நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததால் ரூபா 126.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட 04 பொருளாதார நிலையங்கள் 2017 திசெம்பர் 31 அளவில் ஏனைய நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளிற்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஏ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி மற்றும் அம்பாறையிலுள்ள பொருளாதார நிலையங்களில் முறையே 37 மற்றும் 20 வியாபார நிலையங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**2.16 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்**

ஐக்கிய நாடுகளின் நிறுவனத்தால் 2030 ஆம் ஆண்டளவில் அவர்களிற்கு சொந்தமான அனைத்து நாடுகளிலும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பினை அடைந்து கொள்வதற்காக நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் இதனுடன் இணைந்ததாக இனங்காணப்பட்டிருக்காததுடன் சரியான தரவுகளை சேகரித்தல் மற்றும் பௌதீக வளங்களை முகாமை செய்தல் என்பவற்றிற்கான முறைமை அவ்வாறு இனங்காணப்பட்டிருக்கவில்லை.